பேரவைத் தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்	12,609
வருகை தந்துள்ள பார்வையாளர்கள் (மொத்தம்)	54,621
சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்திருப்பவர்கள்	820

''லெஜிஸ்-அலர்ட்'' என்பதாக கட்டுரைத் தொகுப்பு இதுவரை 10 இதழ்களாக சுமார் 750 கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலிருந்து பொருள் வாரியாக தொகுக்கப் பெற்று உறுப்பினர்களுக்கு அனுப்ப பெற்றுள்ளன.

பேரவை நடவடிக்கைகள்	
தட்டச்சு செய்யப் பெற்றுள்ள பக்கங்கள்	6,902
பேரவைக் கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்துள்ள உறுப்பினர்கள்	7 பேர்

பேரவை நிகழ்ச்சிகளை நல்லமுறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். செய்தியாளர்களுக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நமக்கு மிகவும் ஒத்துழைப்புத் தந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலாளர்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவையை ஒத்தி வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் இப்போது தீர்மானத்தை மொழிவார்கள்.

9 அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''பேரவையின் 25 (1) விதியின் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்.''

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, எங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிற அந்த அறிவிப்பில் ஜுலை மாதம் சட்டமன்றம் கூடும் என்று இங்கேயும் அறிவித்து, அது செய்தியில் வந்திருக்கிறது. ஆனால் திடீரென்று நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைப்போம் என்று சொல்வது ஏற்கனவே அங்கத்தினர்களுக்கு தெரிவித்ததற்கு முரணாக இருக்கிறதே, அதனுடைய விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தெளிவாக விதி என்ன சொல்கிறதோ அதைச் சொன்னேன். மற்றவற்றை பேரவைத் தலைவர் அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளின்படி நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைப்பது தான் மரபு. அந்த முறைப்படி தான் நடக்கும். அந்த வகையிலே தான் அவை முன்னவர் அவர்கள் பிரேரேபித்திருக்கிறார்கள். அவை ஏற்றுக் கொண்டால், நீங்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டால் ஒத்தி வைக்கலாம். அவை வேண்டாம் என்றால், இங்கேயே இருக்கலாம், நாளைக்கும் அவையை வைத்துக் கொள்ளலாம்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, சட்டத்திற்கு உட்பட்டுதான் தேதி குறிப்பிடாமலே மன்றத்தை ஒத்தி வைக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் சட்டத்திற்கு உட்படாமல், சட்டத்திற்கு முரணாகத்தான் ஜூலை மாதம் என்று நீங்கள் அறிவித்தீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி ஜூலை மாதம் எந்தத் தேதி கூடும் என்று நான் ஸ்பெசிபிக்காக அறிவிக்கவில்லை. தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருக்கும் போது நீங்கள் தேதி குறிப்பிடாமல் இப்பொழுது எப்படி ஒத்தி வைக்கலாம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சாதாரணமாக, இந்தக் கூட்டத் தொடருக்குப் பின், செப்டம்பர், அக்டோபரிலே பேரவை மீண்டும் கூடுவது வழக்கம். அவ்வளவு நாள் தள்ளி வைக்க வேண்டாம் என்றும், விரைவிலே கூட வேண்டுமென்றும், ஜூலையிலே கூட வேண்டுமென்று அலுவல் ஆய்வுக் குழுவிலே தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே தான் ஜூலை மாதம் என்று வைத்திருக்கிறோமே தவிர, வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவிலே, நீண்ட நாள் தள்ளி வைக்க வேண்டாம். ஜூலையிலே கூட வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டதற்கிணங்க அதற்கு மதிப்பளிக்க வேண்டுமென்று தான் ஜூலை என்று தெரிவிக்கப்பட்டது. அலுவல் ஆய்வுக் குழுவிலே தலைவர்கள் சொன்ன கருத்து ஜூலையிலே வைத்துக் கொண்டால் நல்லது என்பது. அதைத்தான் நான் சபைக்கு அறிவித்தேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி பேரவையின் 25 (1) விதியின்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 1.47 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

11 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

169. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—அ. பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

170. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடிசைமாற்றுவாரியம் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நன்னடத்தை குறித்து விதிகளை இயற்றுவது 10-4-1981 ஆம் தேதியிடப் பெற்ற வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 253 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு, அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

171 திருச்சிராப்பள்ளியிலுள்ள பர்மா அகதிகள் விற்பனை செய்யும் பொருட்களுக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரியி லிருந்து 6 மாத காலத்திற்கு விலக்களிப்பது குறித்து 6-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 151 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

172 தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியத்தின் 1972-73, 1973-74, 1974-75, 1975-76, 1977-78 ஆம் ஆண்டு களுக்கான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 4/1971) 47-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)

ஆ அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

184 கீழ்க்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 27-8-1969 ஆம தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெறுகிறது)

31-3-1980 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்:

1. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
2. டாக்டர் கே. சௌரிராஜன்